## காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையத்தில்

# சுற்றுச்சூழலை பாதுகாக்க மாணவர்கள் உறுதிமொழி



புதுவை காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மையம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடந்த நிகழ்ச்சியில் இயக்குநர் சசிகாந்த் தாஸ், கடலோர காவல் படை கமாண்டர் சுரேந்திரசிங் தசிலா, என்சிசி அதிகாரி அஷிஷ் திவாரி பங்கேற்றனர்.

புதுச்சேரி, ஜூலை 23: காஞ்சி மாமுனிவர் அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இயற்கை வள மேம்பாட்டை வலியுறுத்தும் நோக்கில் "ஒரு செடி ஒரு உறுதிமொழி" என்ற தலைப்பில் மரக்கன்று நடும் இயக்கத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக, நேற்று விமான நிலைய சாலையில் மரக்கன்று நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிறுவனத்தின் இயக்குநர் சசிகாந்த் தாஸ் தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் இந்திய கடலோர காவல்படையின் புதுச்சேரி மற்றும் மத்திய தமிழ்நாடு கமாண்டர் சுரேந்திர சிங் தசிலா, என்சிசி குழும தலைமையகத்தின் தளபதி கர்னல் அஷிஷ் திவாரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் மாணவர்கள், பேராசிரியர்கள், அலுவலக ஊழியர்கள் கலந்துகொண்டு மரக்கன்றுகள் நட்டு, சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான உறுதி மொழி ஏற்றனர்.

நிகழ்வில் பேசிய சிறப்பு விருந்தினர்கள், 'பசுமை என்பது மனித இனத்தின் ஒருங்கிணைந்த பொறுப்பு, இயற்கையை பாதுகாப்பதே வருங்கால தலைமுறையினருக்கான மிகப்பெரிய பரிசு, ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் குறைந்தது ஒரு மரக்கன்றையாவது நட்டு பராமரிக்க வேண்டும், சுற்றுச்சூழலை காக்கும் பணியில் அனைவரும் தொடர்ந்து பங்கெடுக்க வேண்டும்' என வலியுறுத்தினர்.

Dinakaran / 23/07/2026 / page. No. 14